மாலை முரசு
பக்கங்கள் 15+3
முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை 21.11.2025 | அதிர்வு 114

## அர்ச்சுனாவுக்கு கொலை மிரட்டல்

**ஆளுங்கட்சி எம்.பி. பைசல் மீது அவர் பகிரங்கக் குற்றச்சாட்டு**

தேசிய மக்கள் சக்தி யின் புத்தளம் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் 03▸



'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்




# மாவீரர் வாரம் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

## புலம்பெயர் தேசங்களிலும் நிகழ்வுகள்

(எஸ்.நிதர்ஷன்)

மாவீரர் வாரம் இன்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது.

வடக்கு, கிழக்கில் பல இடங்களில் மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வுகள் இன்று நடைபெற்று வருகின்றன. புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

தமிழர்களின் உரிமைக்காக - தமிழீழ இலட்சியத்துக்காக விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து போராடி வீரகாவியமான மாவீரர்களை நினைவுகூர்ந்து தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நவம்பர் 21 முதல் 27 வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஆரம்ப நாள் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்று வருகின்றன. பல இடங்களில் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகள் பறக்கவிட்டு, மாவீரர்களுக்கான பாடல்கள் ஒலிக்க விடப்பட்டுள்ளன. அத்துடன் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

04▸








# நுகேகொடையில் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இன்று ஆர்ப்பாட்டம்

சில எதிர்க்கட்சிகள் இணைந்து அநுர அரசுக்கு எதிராக ஏற்பாடு செய்த எதிர்ப்புப் பேரணி இன்று பிற்பகல் 2 மணிக்கு நுகேகொடை நகரில் ஆரம்பமானது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, ஸ்ரீலங்கா மகாஜன கட்சி, ஜனதா சேவக கட்சி, நவ ஜனதா பெரமுன உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்றுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இந்தப் பேரணி நடைபெறுகின்றது என்று ஏற்பாட்டாளர்கள் விளக்கமளித்துள்ளனர்.

அத்துடன், அரசின் ஜனநாயக விரோதச் செயல், அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராகவும் இந்தப் பேரணி இடம்பெறுகின்றது என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

சில எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்து "மாபெரும் மக்கள் குரல்" என்ற தொனிப் பொருளின் கீழ் அரசுக்கு எதிராகப் பேரணியை நடத்தினாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதில் பங்கேற்கவில்லை.

நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இதில் கலந்துகொள்ளவில்லை.

மலையகத்திலுள்ள பிரதான இரு கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இந்தப் பேரணியில் பங்கேற்கவில்லை.

விமல் வீரசன்ச, சம்பிக்க ரணவக்க, திலீத் ஜயவீர ஆகியோர் தலைமைப் பதவி வகிக்கும் கட்சிகளும் அரசுக்கு எதிரான இந்தப் பேரணியில் பங்கேற்கவில்லை.

# அடுத்து எங்கள் ஆட்சிதான் மலரும்

## நுகேகொடை பேரணியில் சாமர சம்பத் எம்.பி. சூளுரை



அடுத்து எங்கள் ஆட்சிதான் மலரும் என்பதற்கான ஆரம்ப கட்ட சமிக்ஞையே இந்தக் கூட்டமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

நுகேகொடையில் இன்று நடைபெற்று வரும் அரசுக்கு எதிரான பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தலைவர்களை உருவாக்குவதற்குரிய கூட்டம் அல்ல நுகேகொடை பேரணி. நேரம் வரும்போது நாம் அடுத்த ஜனாதிபதியை ஒன்றிணைந்து தெரிவுசெய்வோம்.

இன்றைய கூட்டத்துக்குரிய ஒலி பெருக்கிகள் கழற்றப்பட்டுள்ளன. பரவாயில்லை, சிறைச்சாலையும் சென்றுவிட்டோம். எனவே, அரசின் அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை.

நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கும்போது நாமலின் பட்டப்படிப்பு பற்றி பேசுவதற்கு முன்னுரிமை வழங்கும் நிலைக்கு அரசு வந்துவிட்டது. நாமலின் பட்டப்படிப்பு பற்றி தேடுவதற்கு முன்னர் ஆட்சியாளர்கள் தமது கல்வித் தகைமைகளை வெளிப்படுத்த வேண்டும்."

– என்றார்.

அதேவேளை, தனது உரையின்போது நாமல் ராஜபக்ஷவை சாமர எம்.பி. புகழ்ந்து பேசி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாட்டி துயிலும் இல்லத்தில் மாவீரர் வார ஆரம்ப நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தேச விடுதலைக்காகப் போராடி மடிந்த வீரமறவர்களை நினைவுகூரும் தமிழ்த் தேசிய மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வு இன்று வேலணை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது.

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தின் தீவக நினைவேந்தல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஈகச் சுடரேற்றப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இதேவேளை, நாளை காலை 9.30 மணியளவில் தீவகத்தில் வாழும் மாவீரர்களின் உறவுகள், உரித்தாளிகளுக்கு மதிப்பளித்து கௌரவம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொது விளையாட்டரங்கின் திறந்தவெளி அரங்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

# கோர விபத்தில் பெண் ஒருவர் பலி!

## நால்வர் காயங்களுடன் வைத்தியசாலையில்

ரிகில்கஸ்கட, கட்டுகஸ்ஹின்ன பகுதியில் இன்று காலை இடம்பெற்ற கோர விபத்தில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் ரிகில்கஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஓட்டோவில் பயணித்தவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.




பெண் ஒருவரும், இரண்டு ஆண்களும், 7 வயதான சிறுவனுமே காயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸ் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

# யாழில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கள்ளுத்தவறணையில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை புன்னாலைக்கட்டுவனில் உள்ள கள்ளுத்தவறனை ஒன்றில் கள்ளு அருந்துவதற்குச் சென்ற நிலையில் தவறணையில் கள்ளு அருந்திக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் மேற்படி குடும்பஸ்தரைத் தாறுமாறாகத் தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த குடும்பஸ்தர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 56 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**அர்ச்சுனாவுக்கு...**

பைசல், தனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சபாநாயகரிடம் இன்று முறையிட்டார்.

நாடாளுமன்றத்தில் இன்று ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியே இந்த விடயத்தை அர்ச்சுனா சுட்டிக்காட்டி இருந்தார்.

"சபாநாயகரே, புத்தளம் மாவட்ட வைத்தியசாலை தொடர்பில் இன்று காலை சபையில் கேள்வி எழுப்பி இருந்தேன்.

எனது கேள்விகள் முடிவடைந்த பின்னர் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றேன். அங்கு வைத்து புத்தளம் மாவட்ட எம்.பி. பைசல் என்னைக் கொலை செய்வதாக அச்சுறுத்தல் விடுத்தார். என்னைப் புத்தளத்துக்கு வர வேண்டாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். சி.சி.ரி.வி. கமரா இருந்தது. அதில் இது பதிவாகி இருக்கும். எனவே, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனக்குச் சாவதற்குப் பயம் இல்லை. ஆனால் மிரட்டல்களுக்கு அடிபணிய முடியாது." – என்றார்.

எனினும், தான் எவரையும் மிரட்டவில்லை எனவும், அர்ச்சுனா எம்.பி. பொய்யுரைக்கின்றார் எனவும் ஆளுங் கட்சி எம்.பியான பைசல் தெரிவித்தார்.

# வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி ஓட்டோ மோதி பரிதாப உயிரிழப்பு!

வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி மீது ஓட்டோ மோதியதில் மேற்படி பாதசாரி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கெஸ்பாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெஸ்பாவ - பண்டாரகம வீதியில் ஆயுர்வேத சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கெஸ்பாவவில் இருந்து பண்டாரகம நோக்கிச் சென்ற ஓட்டோ, வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மடபாத்த பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய ஓட்டோவின் சாரதியும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகப் பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கெஸ்பாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மாவீரர் வாரம்...**

இந்த மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இம்முறை மிகவும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான இன்று காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள நினைவுத் தூபி முன்பாக நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மாணவர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.










### மாவீரர் வாரத்தின் முதல் நாளில்

# கொழும்பில் மாவீரருக்கு ரவிகரன் எம்.பி. அஞ்சலி!





**(பா.சதீசன்)**

மாவீரர் வாரம் இன்று ஆரம்பித்துள்ள நிலையில் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாவீரர் வாரத்தின் முதல் நாளில் இலங்கைத் தலைநகர் கொழும்பில் மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாகத் தனது அஞ்சலிகளைச் செலுத்தினார்.

அந்தவகையில் மாவீரர் துயிலும் இல்லத்தைத் தாங்கிய திருவுருவப் படத்துக்குச் சுடரேற்றி, மலர் தூவி மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலிகளைச் செலுத்தினார்.

2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துக்கான நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கென தற்போது ரவிகரன் எம்.பி. கொழும்பில் தங்கியுள்ள நிலையில், இலங்கைத் தலைநகர் கொழும்பிலேயே அவரால் இவ்வாறு மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமழரசின் நிலைப்பாடு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாலேய வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்காமல் இலங்கைத் தமிழரசுக் கட்சி விலகி இருந்தது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைச்சரின் கருத்து ஒரு வகையில் சரியானது எனினும், இவ்விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை அவரும் அவரது அரசும் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தை இலங்கைத் தமிழரசு கட்சி முழுமையாக எதிர்க்காமல் விடவில்லை என்பதை அவர் கவனிக்க வேண்டும். வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் போது வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் இருந்தமை மூலம் அதனை எதிர்க்காத நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி பிரதிபலித்தது என்பது உண்மைதான். ஆனால் அதன் அர்த்தம் முழுமையாக அது வரவு - செலவு திட்டத்தை வரவேற்கின்றது என்பதோ அல்லது முழுமையாக எதிர்க்கவில்லை என்பதோ அல்ல.

வரவு - செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் போது சுமார் பத்து அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் விடயத்தில் அவற்றை நிறைவேற்றும் போது, இலங்கைத் தமிழரசுக் கட்சி வழமைக்கு மாறாக இம்முறை அவை ஒவ்வொன்றுக்கும் வாக்களிப்பை கோரியமையோடு மட்டுமல்லாமல், அந்த அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளை எதிர்த்தும் வாக்களித்து, அதன் மூலம் ஒரு செய்தியையும் வெளிப்படுத்தி வருகின்றது.

அந்த அமைச்சுகளின் செயல்பாடுகள் தொடர்பில் தமிழர் தரப்பின் ஆட்சேபனையை - எதிர்ப்பை - தமிழரசுக் கட்சி உரிமையோடு பதிவு செய்கின்றது என்பதுதான் அந்தச் செய்தி.

நீதி அமைச்சு (இழப்பீட்டு அலுவலகம்), பாதுகாப்பு அமைச்சு (முப்படைகள்), வெளிவிவகார அமைச்சு (ஐ.நா. பிரிவு), மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு (போதிய தேர்தல் நிதி ஒதுக்காமை), கடற்றொழில் அமைச்சு (கடற்கரையோர அதிகார சபை), நீர்ப்பாசன அமைச்சு (மகாவலி அபிவிருத்தி அதிகார சபை), சுற்றுச்சூழல் அமைச்சு (வன ஜீவராசிகள் திணைக்களம், வன வளத் திணைக்களம்), கலாசார அமைச்சு (பௌத்த சாசனம்) போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கே தமிழரசுக் கட்சி தனது எதிர்ப்பை உத்தியோகபூர்வமாகப் பதிகின்றது.

இதில் சிலவற்றுக்கான குழுநிலை விவாதங்கள் ஏற்கனவே நடைபெற்று அவற்றை எதிர்த்து தமிழரசு வாக்களித்துவிட்டது. எஞ்சிய அமைச்சுக்களுக்கான குழுநிலை விவாதங்களின் முடிவில் வாக்களிப்பை கோரி, அவற்றை எதிர்த்து வாக்களித்து, தமது எதிர்ப்பைப் பதிவு செய்ய தமிழரசுக் கட்சி தீர்மானித்திருக்கிறது என்பதுதான் நிலைமை.

இந்த அமைச்சுக்களும் அவற்றின் செயற்பாடுகளும் தமிழர் தேசத்திற்கு நீதி நியாயமான தீர்வு கிடைப்பதற்கும், புரிந்துணர்வுடன் கூடிய நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் குந்தகமாக உள்ளன என்பதை வெளிப்படுத்திப் பதிவு செய்வதற்காகவே அந்தந்த அமைச்சுகளுக்கு உரிய குழுநிலை விவாதங்களின்போது அவற்றின் மீதான வாக்கெடுப்பில் தமது எதிர்ப்பை தமிழரசுக் கட்சி பதிவு செய்கின்றது என்பதுதான் இதன் அர்த்தம். கருத்து.

இந்த அரசாங்கத்தோடு பேச்சு மூலம் தீர்வு ஒன்றை காண்பதற்கு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த தமிழரசு விரும்பியது. அதனால் தான் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பில் அதனை எதிர்த்து வாக்களிக்காமல் கட்சி நடுநிலை வகித்தது. அதற்காக இந்த அரசின் முக்கிய அமைச்சுகளின் செயல்பாட்டை தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தியலை அரசு அல்லது அமைச்சர் பிமல் ரத்நாயக்கா போன்றவர்களோ தவறாகக் கற்பிதம் செய்து கொள்ளக் கூடாது. இந்த விடயத்தில் அதை ஆளும் தரப்பு புரிந்து கொள்வது முக்கியம்.




# இந்த அரசாங்கமாவது நம் குரலுக்கு செவி சாய்க்குமா...?

**கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மலையகத் தமிழ் மக்களாகிய நாங்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் வரலாற்று ரீதியான ஓரங்கட்டல், சுரண்டல் மற்றும் பாகுபாடுகளின் மத்தியில், எங்கள் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடி வருகின்றோம். இதிலும் நில உரிமையானது எங்களின் கண்ணியம், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் முழுமையான குடியுரிமையை நிலைநாட்டுவதற்கான மிக முக்கியமான காரணியாக உள்ளது.

மலையக மக்களின் நில உரிமைகளை உறுதி செய்ய அரசுகள், அரசியல் தலைமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தாலும், அவை சரியான முறையில் மற்றும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா என்ற கேள்வி ஆய்வுக்குரியதே.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது தென்னிந்தியாவிலிருந்து தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையக மக்களான நாங்கள் ஆரம்பத்திலிருந்தே “லயன் அறைகள்” எனும் குறுகிய, நில உரிமையற்ற குடியிருப்புகளிலேயே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தோம். இந்த லயன் வீடுகளோ அல்லது அவை அமைந்துள்ள நிலமோ எங்களின் தனிப்பட்ட உரிமையாக ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்படவும் மாட்டாது.

குடியுரிமைப் பிரச்சினை சட்ட ரீதியாகத் தீர்க்கப்பட்ட பின்னரும், பெரும்பாலான மலையக மக்கள் இன்னமும் நிலமற்றவர்களாகவும், தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாகவுமே உள்ளனர். தனி வீட்டுக்கான காணி உரிமை மற்றும் விவசாயம், தொழில் முதலீடு போன்ற தேவைகளுக்கான வாழ்வாதாரக் காணி உரிமை ஆகியவை மலையக மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளாக உள்ளன. இது எங்களை வெறும் தோட்டத் தொழிலாளர்களாக மட்டும் பார்க்காமல், நாட்டின் முழுமையான குடிமக்களாக அங்கீகரிக்கவும், பிற சமூகங்களைப் போல சமமான வாய்ப்புகளைப் பெறவும் அத்தியாவசியமானதாகும்.

நில உரிமைகளை உறுதி செய்வதற்காகப் பல திட்டங்களும், முன்மொழிவுகளும் கடந்த கால அரசுகளில் கொண்டுவரப்படிருந்தன.

குறிப்பாக லயன் குடியிருப்புகளுக்கு மாற்றாக தனி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, அதனுடன் சிறு அளவிலான காணி உரிமையும் வழங்குவது தொடர்பான முன்னெடுப்புகளும் முன்வைக்கப்பட்டன.

ஆனால் பகிர்வில் உள்ள சமத்துவமின்மை முன்னெடுப்புகள் இருந்தபோதிலும், நிலப் பகிர்வு மலையக மக்களிடையே சரியாகவும் சமமாகவும் பகிரப்படவில்லை என்பது ஒரு நிதர்சனமான உண்மை தான்.

திட்டங்களின் போதாமை மற்றும் பாரபட்சம் நிலவுவது முதன்மையாகிறது.

குறைந்த காணி பகிர்வும் தனி வீடுகளுக்கு வழங்கப்படும் காணியின் அளவு ஒரு குடும்பத்தின் சுய வாழ்வாதாரத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. மற்ற கிராமப்புற சமூகங்களுக்கு வழங்கப்படும் காணியின் அளவோடு ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாகும்.

தவறான பயனாளிகளை தெரிவு செய்கின்றமையால் காணி வழங்கள் திட்டங்களில் உண்மையிலேயே நிலமற்ற மற்றும் தேவைப்படும் குடும்பங்களுக்குப் பதிலாக, அரசியல் செல்வாக்குள்ள மற்றும் வேறு வழியில் வசதி படைத்தவர்களுக்குக் காணி வழங்கப்படுவதாகப் பரவலான குற்றச்சாட்டுகள் உள்ளன. இதனால் தகுதியானவர்கள் நிலத்தைப் பெறுவதில் பாரபட்சத்துக்கு உள்ளாகின்றனர்.

நில ஒப்படைப்பின் வேகம் குறைவாக உள்ளது. நிலம் வழங்குவதற்கான அரசின் செயல்முறைகள் மிகவும் மந்தமாகவும் சட்டச் சிக்கல்கள் நிறைந்தனவாகவும் உள்ளன. இதனால் திட்டங்கள் நிறைவடைவதில் காலதாமதம் ஏற்பட்டு மலையக மக்களின் நில உரிமை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

இந்தச் சூழலில், “இந்த அரசாங்கமாவது நம் குரலுக்கு செவி சாய்க்குமா...?” என்ற கேள்வி ஒவ்வொரு மலையக மக்களிடையேயும் ஆழ்ந்த ஏக்கத்துடனும், சந்தேகத்துடனுமே எழுகிறது. புதிய அரசாங்கங்கள் வரும்போது, எங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும், செயல்பாட்டில் காலதாமதங்களும், அரசியல் சலசலப்புகளும் நீதியை தாமதப்படுத்துகின்றன.

மலையக மக்களின் நில உரிமையைப் பாதுகாக்க, உறுதியான அரசியல் விருப்பமும் தோட்டக்கம்பனிகளின் ஒத்துழைப்பும் அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நீடித்த தீர்வும் அவசியமாகிறது. நில உரிமைக்கான இந்தப் போராட்ட

தொடர்ச்சி▼




# இந்த அரசாங்கமாவது நம் குரலுக்கு செவி சாய்க்குமா...?

தொடர்ச்சி▲

மானது, இலங்கையின் ஒரு முக்கிய குடிமக்களாக மலையகத் தமிழர்கள் நாங்கள் சமத்துவத்தை யும் நிரந்தரமான முகவரியையும் பெறுவதற்கான போராட்டமாகும்.

இந்தியா போன்ற நாடுகளின் உதவியுடன் வீட்டு உதவி திட்டங்கள் மூலம் வீடுகள் கட்டப்பட்டா லும், நில உரிமை உறுதிப்படுத்தப்படாவிட் டால், அவர்களது வாழ்வு நிலையானதாய் இருக்காது. எனவே எங்கள் சமூகம் எழுப்பும் குரலுக்கு இந்த அரசாங்கமாவது செவிசாய்த்து, நிலத்தை சட்டபூர்வ மான உரிமையுடன் வழங்குவதன் மூலம், எங்களின் இருநூறு ஆண்டுகால எங்கள் நீங்காத வரலாற் றிற்கு ஒரு நிரந்தரமான விடிவைக் கொடுக்க வேண் டியது காலத்தின் கட்டாயமாகும். ■



# மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் இயக்க அனுமதி கோரல்

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் பொது வைத்தியசாலையை மாகாண சபை நிர்வாகத்தில் இருந்து மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அனுமதியைக் கோரியிருப்பதாக மன்னார் நகர சபை கூட்டத்தில் கருத்து முன்வைக்கப்பட்டு இது விடயமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த திங்கள்கிழமை மன்னார் நகர சபையின் மாதாந்த கூட்டம் நடைபெற்றபோது, இது தொடர்பாக மன்னார் நகர சபை தவிசாளர் ஏ.பி.டீ.டீ.பி. வசந்தன் இங்கு தனது கருத்தை முன்வைத்தார்.

மன்னார் பொது வைத்தியசாலை மன்னார் மாவட்ட அனைத்து மக்களும் பயன்படுத்தும் கட்டாயத் தேவையாக இருந்து வருகின்றது.

ஆகவே இங்கு அதிகமான தாதியர் வைத்தியர்கள் தேவையுள்ளது. அத்துடன் ஏனைய வளங்களும் தேவைப்படும் நிலையும் உள்ளது.

யாழ். வைத்தியசாலையை நோக்கும்போது அது மத்திய அரசின் கீழ் இயங்கி வருவதால் அது சகல வசதிகளுடன் செயற்பட்டு வருகின்றது.

ஆனால் மன்னார் வைத்தியசாலையில் வசதிகள் அற்ற நிலை காணப்படுவதால் நோயாளிகளின் சிறிய தேவைகளுக்கும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையை நோக்கியே அனுப்பப்பட்டு வருகின்றனர்.

மன்னாரிலிருந்து யாழ். நோக்கி நோயாளிகளை அழைத்துச் செல்லும் போது இடையில் மரணங்கள் ஏற்படும் அபாயமும் நிலவி வருகின்றது.

இந்த நிலையில்தான் நாம் மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வரும்போது மேற்கூறப்பட்ட குறைகள் நீங்கக் கூடிய தன்மை ஏற்படும் என நான் எனது தனிப்பட்ட கருத்தாக இதை முன்வைக்கின்றேன் என்று இதன்போது தெரிவித்தார்.

மன்னார் வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையில் இது தொடர்பாக கலந்துரையாடல் நடைபெறும்போது எமது உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டு இது தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட இருந்தது. ஆனால் அவைகள் தற்பொழுது 170 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை கீழ் இருக்கும் வைத்தியசாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யும் முறைமையே காணப்படுகிறது.

மத்திய அரசிலிருந்து நிதி மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யும் போது ஒரு குறிப்பிட்ட நிதியையே வழங்கின்றது. இவை மாகாணத்தின் கீழ் இருக்கும் வைத்தியசாலைகளுக்கு பகிரும்போது மன்னார் வைத்திசாலைக்கு மிக சொற்ப நிதியே வந்தடைகிறது.

ஆனால், மத்திய அரசிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்போது அது நேரடியாகவே குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு சென்றடைகின்றது.

இதனால்தான் மன்னார் வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்ல வேண்டும் என நான் எனது கருத்தை இங்கு முன் வைக்கின்றேன்.

இருந்தும் இந்த சபையில் இது தொடர்பாக எதிரும் புதிருமான கருத்துக்கள் இருப்பதால் உறுப்பினர்கள் இது தொடர்பாக சிந்தித்து அடுத்த அமர்வின் போது இதற்கான தீர்வை எடுத்துக் கொள்வோம்.

மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வதற்கு மன்னார் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதி கோரியதுக்கு அமையவே இந்தக் கருத்து இங்கு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உப்புவெளி பொது நூலகத்துக்கு நூலக ஆவணவாக்கல் சபை விருது





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின், உப்புவெளி பொது நூலகத்துக்கு 2024ஆம் ஆண்டுக்கான தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று (20) நடைபெற்ற நிகழ்வில் வைத்து இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுக் கடந்த வருடம் 2024, ஐப்பசி மாதத்தில் “உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே” எனும் தொனிப் பொருளில் பொது நூலகங்களால் வாசிப்புமாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பொது மக்கள், வாசகர்கள் மத்தியில் வாசிப்பின் அவசியம் மற்றும் மகத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் சிறந்த செயற்பாடுகள் நடத்தப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் சிறந்த பொது நூலகங்கள் மற்றும் நூலகர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் ஒவ்வொரு வருடமும் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதே வேளை கடந்த 2023 ஆம் ஆண்டும் உப்புவெளி பொது நூலகத்துக்கு இத்தகைய தேசிய விருது கிடைக்கப்பெற்றது.



# அம்பாறையில் தமிழினப் பற்றாளர் மதிசூடியின் ஓராண்டு நினைவில் உலருணவுகள் வழங்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

கனேடிய தமிழ் வானொலி பத்திரிகை துறையின் முன்னோடிகளில் ஒருவரும் நாடறிந்த பிரபல சமூக சேவையாளருமான குலத்துங்கம் மதிசூடி மறைந்து ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி அம்பாறையில் நேற்று வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது வீரச்சோலை வீரமுனை மற்றும் சொறிக்கல்முனை ஆகிய இடங்களில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உலருணருவுப் பொருள்களும் உடுதுணிகளும் வழங்கப்பட்டன.

சமூக செயற்பாட்டாளர் கி.ஜெயசிறிலின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த குலத்துங்கம் மதிசூடி கனடாவில் ஓராண்டுக்குமுன் கனடாவில் அகால மரணமடைந்தார் .

பிரபல சமூக சேவையாளர் மதிசூடி கடந்த 40 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வந்தவர். அவ்வப்போது இலங்கைக்கு வந்து பலவிதமான சமூக சேவைகளை வடக்கு கிழக்கில் வழங்கி வந்தவர்.

தாம் பிறந்த மண்ணை வெகுவாக நேசித்த தமிழினப் பற்றாளர் மதிசூடி கொரோனா காலகட்டத்திலும் வெள்ள அனர்த்த காலகட்டத்திலும் இங்கு வந்து பாரிய சேவைகளை செய்தவர்.

அது மாத்திரமல்ல ஒவ்வொரு வருடமும் வந்து நலிவுற்ற மக்களுக்கு நேரடியாகச் சென்று உதவி செய்து வந்தவர்.









# கிட்டங்கி வீதி வெள்ள நீர் பரவல் இரவில் கடமையில் இராணுவம்!

(பாறுக் ஷிஹான்)

கிட்டங்கி வீதியை ஊடறுக்கும் மழை வெள்ளம் காரணமாக துரைவந்திய மேடு கிராமத்தின் தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இராணுவத்தினர் இரவு கடமையில் அந்தப் பகுதியில் ஈடுபட்டு வருகின்றனர்.



கிட்டங்கி வீதி அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் பரவல் காரணமாக அந்தப் பகுதியால் பயணம் செய்பவர்கள் பாதுகாப்பு அறிவுறுத்தலைப் பின்பற்றி செல்வதை அவதானிக்க முடிகின்றது.

கல்முனை மாநகரையும் நாவிதன்வெளி பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் இன்று போக்குவரத்து கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இடையிடையே பெய்யும் மழை காரணமாக பல்வேறு பகுதிகளிலும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. பல வீதிகளில் போக்குவரத்துக்காக மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நாவிதன்வெளி பகுதியை இணைக்கும் கிட்டங்கி வீதியால் நீர் பாய்வதால் துரவந்திய மேடு கிராமத்துக்கு செல்வதற்கான பாதைகள் மூடப்பட்டு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, இந்த வீதியில் ஆற்றுவாழைகள் பரவியிருப்பதால் போக்குவரத்துக்கு பாரிய இடையூறு ஏற்பட்டிருந்தது. இந்த ஆற்றுவாழைகளை அகற்றும் நடவடிக்கை கல்முனை மாநகர சபை முன்னெடுத்துள்ளது. நாவிதன்வெளி பிரதேச செயலகம் பிரதேச சபை என்பன பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.இத தவிர சவளக்கடை கல்முனை பொலிஸார் போக்குவரத்தினை சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.இதையடுத்து இப்பாதை ஊடான போக்குவரத்துகள் சுமூகமாக இடம் பெற்று வருகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் பரவலாக காணப்படுவதுடன் சில இடங்களில் வடிந்தோடி காணப்படுகின்றது. தினமும் விவசாயிகள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் நாளந்தம் பயணிக்கும் இவ்வீதியில் வெள்ள நீர் பரவி வருவதால் பிரதேச மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது அன்றாட பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதிக்கான நிரந்தர பாலம் அமைக்குமாறு நீண்டகாலமாக பிரதேச மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற போதும் கோரிக்கையை இதுவரைக்கும் எந்த அரசும் நிறைவேற்றவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.





# அம்பாறையில் தோழர் பத்ம நாபாவின் 74ஆவது அகவை தினம் அனுஷ்டிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் தியாகி தோழர் க.பத்மநாபா வின் 74 ஆவது அகவை தினம் பெரிய நீலாவணையில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்பள்ளி மாண வர்களுக்கான கற்றல் உபகரணகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றதுடன் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்ட னர்.

இந்த நிகழ்வு காரைதீவு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ் .நேசராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பத்மநாபா அறிவாற்றல் கழகத்தின் ஸ்தாபக தலைவர் தோழர் ஜோதி கலந்து கொண்டதுடன் சிறப் புரையும் வழங்கினார்.

மூத்த தோழர்களான பெர்னாண்டோ, சிராஃப், நகுலன்,பாஸ்கரன்,கோபன், வாசு மற்றும் வரதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் ஆசிரியர்கள், பெற்றோர் கள் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு தோழர் பத்மநாபா சேவை ஒன்றியத்தின் ஸ்தாபக தலைவர் தோழர் லவனின் வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெற்றது. புலம்பெயர் தோழர்கள் இந்த வைபவத்துக்கான அனுசரணையை வழங்கியிருந்தனர்.
















# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் கைப்பற்றப்பட்டது; இருவர் கைது!

(பூ.லின்ரன்)

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடாரப்பு செம்பியன்பற்று தாளையடி பகுதியில் நீண்டகாலமாக சட்டவிரோத மாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த டிப்பர் ஒன்று நேற்றிரவு 8 மணியளவில் கைப்பற்றப்பட்டது. இரண்டு சந்தேக நபர்களும் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த டிப்பரில் பல ஆண்டுகளாக இரவு பகலாக மணல் கடத்தல் இடம்பெற்று வந்த நிலையில் மருதங்கேணி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அத்துக்கல தலைமையில் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட மருதங்கேணி பொலிஸார் குடாரப்பு பகுதியில் வைத்து இந்த டிப்பரை மீட்டதுடன் இரண்டு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது என்று மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டி 26 ஆம் திகதி

## நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடத்த ஏற்பாடு

வடமாகாண மரநடுகை மாதத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் நடத்திவரும் தாவராவதானிப் போட்டி இம்முறையும் நடைபெறவுள்ளது.

இயற்கை எனது நண்பன் என்று இயற்கையை நேசித்த தமிழர் வாழ்வியல் இன்று இயற்கையில் இருந்து தூரவிலகிச் சென்றுகொண்டிருக்கிறது. இதுவே இன்றைய சூழற் பிரச்சினைகளுக்கு எல்லாம் தலையாய காரணம். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடுக்கும் வகையில் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானிப் போட்டியை நடத்தி வருகிறது.

இந்த ஆண்டுக்கான இப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில்) நடைபெறவுள்ளது.

தாவராவதானி போட்டியில் மாணவர்கள் மாத்திரம் அல்லாது பால், வயது வேறுபாடின்றி எவரும் முன்பதிவு இல்லாமல் கலந்துகொள்ளமுடியும். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தாவராவதானி சான்றிதழோடு பரிசுகளும் வழங்கப்படும் எனவும், மேலதிக விவரங்கள் தேவைப்படின் 0775565460 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சை எழுத சென்ற மாணவன் பாம்பு கடிக்கு இலக்கு!

(பூ.லின்ரன்)

உயர்தரப் பரீட்சை எழுதச் சென்ற மாணவன் பருத்தித்துறையில் பாம்பு கடிக்கு இலக்காகியுள்ளார்.

யாழ். பருத்தித்துறை காட்லிக் கல்லூரிக்கு உயர்தரப் பரீட்சை எழுத சென்ற மாணவன் ஒருவன் பாம்பு கடிக்கு இலக்காகிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பரீட்சை எழுத சைக்கிளில் சென்ற மாணவன் ஒருவன் சைக்கிளை நிறுத்துவதற்கு நிறுத்தும் இடத்துக்குச் சென்ற போது அந்த இடத்தில் பாம்பு கடிக்கு இலக்காகியுள்ளார்.

பாம்பு கடிக்கு இலக்காகிய மாணவனை உடனடியாக வடமராட்சி வலயக்கல்வி மற்றும் பொறுப்பான அதிகாரிகள் இணைந்து நோயாளி காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

பின்னர் குறித்த மாணவன் ஹாட்லிக் கல்லூரியில் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டார். ஆனாலும் நோயாளி காவு வண்டி, வைத்தியர்களது கண்காணிப்பு டன் மாணவன் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டார்.

# சட்டமூலங்கள் தொடர்பில் ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்கும் வரை ஓயமாட்டோம்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலைநாட்டும் நமது போராட்டம் தொடரும்.

சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம்.

குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு உச்ச நீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் பெற்ற 8 ஏப்ரல் 2025 தீர்ப்பின் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது.

சொல்லப் போனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஆட்சியைச் செலுத்த வேண்டும், மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது.

அரசமைப்புச் சட்டத்தின் சட்டகத்துக்குட்பட்டே அரசமைப்புப் பதவியில் இருப்போர் செயல்பட வேண்டுமே ஒழிய, அரசமைப்பை மீறிச் செயல்படலாகாது.

சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் மறுப்பது / (தமிழ்நாடு ஆளுநர் செய்தது போல) காலவரையின்றி ஒப்புதல் வழங்காமல் நிறுத்தி வைப்பது எனும் நான்காவது விருப்பத் தேர்வு ஆளுநருக்கு இல்லை.

சட்டமூலங்களின் மீது முடிவெடுக்காமல் காலவரையின்றி ஆளுநர் தாமதம் செய்ய இயலாது. அப்படி, எந்த விளக்கமும் இல்லாமல் நீண்ட காலம் இழுத்தடித்தால், மாநிலங்கள் நீதிமன்றங்களை அணுகலாம். ஆளுநர்கள் வேண்டுமென்றே தாமதிப்பதற்கு எதிராக வழக்கு தொடுத்து, கேள்விக்குட்படுத்தி நியாயம் பெறலாம்.

என்பனவற்றைத் தனது விளக்கத்தில் உச்சநீதிமன்ற அமர்வு மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

காலவரையின்றிக் காலம் தாழ்த்தலாம், சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் மறுக்கலாம் எனும் தமிழ்நாடு ஆளுநரின் கூற்றை உச்ச நீதிமன்றத்தின் நேற்றைய கருத்து மீண்டுமொருமுறை நிராகரித்துள்ளது.


தமிழ்நாடு ஆளுநர் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து ஆளுநர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில் செயல்பட வேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப் போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம். அரசியல்சட்டப்பிரிவு 361-க்குப் பின்னால் ஆளுநர்கள் ஒளிந்துகொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

அரசியல் சட்டத்தால் அமையப்பெற்ற எந்தப் பதவியும் அச்சட்டத்துக்கு அப்பாற்பட்டதில்லை என நான் திடமாக நம்புகிறேன். உயர்ந்த அரசமைப்புப் பதவிகளில் இருப்போரே அரசமைப்புச் சட்டத்தை மீறி நடந்தாலும், நீதிமன்றங்கள்தான் ஒரே நம்பிக்கை. ஆகவே, நீதிமன்றங்களின் கதவு தீர்வுபெறத் திறந்தே இருக்க வேண்டும். அது தனது கதவுகளை அடைத்தால், நமது அரசமைப்பின் படியான மக்களாட்சியில் சட்டத்தின் ஆட்சியைச் சிறுமைப்படுத்திவிடும்; அரசியல் உள்நோக்கத்தோடு செயல்படும் ஆளுநர்கள் அரசமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்வதை ஊக்குவிக்கும்.

தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தை சட்டங்களின் மூலம் நிறைவேற்ற, அரசமைப்புச் சட்டத்துக்குட்பட்டு அரசமைப்புக் கருவிகள் செயல்படுவதை உறுதிசெய்ய தொடர்ந்து உழைப்போம். எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# சமூக ஊடகங்களில் இளையராஜாவின் பெயர், படங்களைப் பயன்படுத்த தடை





திரைப்பட இசையமைப்பாளர் இளையராஜாவின் புகைப்படத்தை, வணிக நோக்கத்துடன் பயன்படுத்த சமூக வலைத்தளங்களுக்குத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

யூடியூப் சனல்கள், சோனி உள்ளிட்ட இசை நிறுவனங்கள், சமூக வலைத்தளங்களுக்கு எதிராக இளையராஜா தொடர்ந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் இன்று இந்த இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அந்த மனுவில், தன்னை அடையாளப்படுத்தும் வகையில் தனது புகைப்படம், பெயர், இசைஞானி என்ற பட்டப் பெயர், குரல் என எதையும் பயன்படுத்தக் கூடாது எனவும் சமூக வலைத்தளங்களில் ஏற்கனவே பதிவிடப்பட்ட புகைப்படங்களை நீக்க வேண்டும்.

அனுமதியின்றி தனது புகைப்படத்தைப் பயன்படுத்தியதன் மூலம் கிடைத்த வருமான விவரங்களைத் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

அப்போது, இளையராஜா தரப்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணிகள் இளையராஜாவின் புகைப்படத்தை மார்ஃபிங் செய்தும், ஏ.ஐ. தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மாற்றியும் பயன்படுத்தி வருவாய் ஈட்டுவதாகக் குற்றம் சாட்டினர்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, பெயரை, புகைப்படங்களைப் பயன்படுத்துவதால் இளையராஜாவுக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இளையராஜா தரப்பு மூத்த சட்டத்தரணி, தனது புகைப்படத்தையோ, பெயரையோ வணிக ரீதியாக பயன்படுத்தி வருவாய் ஈட்டுகின்றனர்.

இது தனது தனிப்பட்ட உரிமையைப் பாதிக்கும் செயல் என்பதால், யூடியூப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் ரீல்ஸ், மீம்ஸ்களில் அனுமதி இன்றி இளையராஜா புகைப்படத்தைப் பயன்படுத்துவதாகவும், சில நேரங்களில் அவதூறான கருத்துகளும் பதிவிடப்படுவதாகவும் வாதிடப்பட்டது.

இளையராஜா தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, சமூக வலைத்தளங்களில் இளையராஜாவின் புகைப்படத்தை அனுமதி இன்றி பயன்படுத்த இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.மேலும் மனுவுக்குப் பதில் அளிக்கும்படி யூடியூப் சேனல்களுக்கும் நீதிபதி உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்துள்ளார்.



# நேபாளத்தில் மீண்டும் போராட்டம்: ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

நேபாளத்தில் மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதையடுத்து, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் சமூக வலைதளங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்து 'ஜென்-ஸீ ' இளைஞர்கள் கடந்த செப்டம்பரில் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தினர். பின்னர் இந்த போராட்டம் வேலையின்மை மற்றும் ஊழலுக்கு எதிராக திரும்பியது.

இளைஞர்களின் போராட்டத்தை எதிர்கொள்ள இயலாமல் நேபாள பிரதமர் சர்மா ஒலி தனது பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து, நேபாளத்தின் இடைக்கால அரசு முன்னாள் தலைமை நீதிபதி சுஷிலா கார்க்கி தலைமையில் அமைக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களாக அமைதி திரும்பிய நிலையில், கடந்த இரு நாள்களாக 'ஜென்-ஸீ' இளைஞர்களுக்கும், சர்மா ஒலி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் வன்முறை சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இதையடுத்து, பதற்றத்தை கட்டுப்படுத்த பாரா, சிமாரா பகுதிகளில் இரண்டாவது நாளாக மதியம் 1 மணியிலிருந்து இரவு 8 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால அரசின் பிரதமர் சுஷிலா கார்க்கி கூறுகையில்,

"மார்ச் 2025, 2026 இல் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஜனநாயக நடைமுறைகள் மீது இளைஞர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். நாட்டை நிர்வாகம் செய்ய புதிய தலைமுறையினரிடம் ஆட்சியை ஒப்படைக்க விரும்புகிறோம்." என்றார்.





# 824 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா ஒப்புதல்

824 கோடி இந்திய ரூபா பெறுமதியான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு (டி.எஸ்.சி.ஏ) நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

மொத்தம் 824 கோடி இந்திய ரூபா மதிப்பிலான வெளிநாட்டு ஆயுத விற்பனை தொடர்பான 2 திட்டங்களுக்கு வெளியுறவுத் துறை ஒப்புதல் அளித்துள்ளது.

இதில், 418 கோடி இந்தோய ரூபா மதிப்பிலான எக்ஸ்காலிபர் ஏவுகணை மற்றும் 406 கோடி இந்திய ரூபா மதிப்பிலான ஈட்டி ஏவுகணை அமைப்பு ஆகியவை அடங்கும். இது அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு இலக்குகளை ஆதரிக்கும்.

மேலும் அமெரிக்கா, இந்தியா இடையிலான இராஜதந்திர உறவை வலுப்படுத்தவும் இது உதவும். மேலும் இந்தோ-பசிபிக் மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அரசியல் நிலைத்தன்மை, அமைதி, பொருளாதார முன்னேற்றத்துக்கான முக்கிய சக்தியாக திகழும் ஒரு முக்கிய கூட்டாளியின் (இந்தியா) பாதுகாப்பை மேம்படுத்தவும் உதவும்.

இந்திய பாதுகாப்புத் துறைக்கு இது மிகப்பெரிய ஊக்கமாக இருக்கும். குறிப்பாக, துல்லியமான தாக்குதல் திறன் கொண்ட உபகரணங்களை வழங்குவதன் மூலம் இந்தியாவின் தற்போதைய மற்றும் எதிர்கால பிராந்திய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறன் மேம்படும்.

மேலும் இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தவும் இது உதவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி மலேசியாவின் கோலாலம்பூரில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத்தை சந்தித்தார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பான 10 ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் தொடர்ச்சியாக 824 கோடி இந்திய ரூபா மதிப்பிலான ஆயுதங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புதல் வழங்கி உள்ளது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 21/11/2025

**உணவுப்பழக்கத்தை மாற்றிய கனேடியர்கள்**

விலைவாசி உயர்வு காரணமாக, கனேடியர்கள் தங்கள் உணவுப்பழக்கத்தையே மாற்றியுள்ளனர் என சமீபத்திய ஆய்வொன்று தெரிவிக்கிறது. பொதுவாகவே, கொரோனா காலகட்டத்துக்கு 02▶



# கனடாவின் பிரம்டன் நகரத்தில் தமிழீழத் தேசியக் கொடி நாள்

கனடாவின் முக்கிய நகரான பிரம்டனில் தமிழீழத் தேசியக் கொடி நாள் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது.

பிரம்டன் நகரில் ஏற்கனவே முள்ளி வாய்க்கால் முற்றம் போன்ற தாயக சார்ப்பு நகர்வுகள் இடம்பெற்ற நிலையில் இந்த புதிய முன்னெடுப்பு வந்துள்ளது.

இந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் இன்று நவம்பர் 21 ஆம் திகதி காலை 9.30 க்கு பிரெம்ரன் நகரமுதல்வர் பற்றிக் பிறவுண் தலைமையில் கென் வலன்ஸ் சதுக்கத்தில் உள்ள கொடிக்கம்ப முற்றத் தில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்படும் என பிரம்டன் நகர சபை அறிவித்துள்ளது.

முன்னதாக தமிழீழத் தேசியக் கொடி நாளை அங்கீகரித்து பிரம்டன் நகர சபை சுற்றுநிருபம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. தமது விடாமுயற்சி மற்றும் முன் னகர்வுகளால் தமிழீழத் தேசியக் கொடி நாளுக்குரிய இந்த அங்கீகாரம் கிட்டியதாக உலகத் தமி ழர் உரிமைக் குரல் என்ற கனேடிய புலம் பெயர் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.



PROCLAMATION

**Tamil Eelam National Flag Day**

**WHEREAS:** Every year on November 21, Eelam Tamils worldwide commemorate Tamil Eelam National Flag Day. This day symbolizes the collective identity of the Eelam Tamil nation and their ongoing resistance to the genocide perpetrated against them since the 1930s.

The Voice of Global Tamil Rights is an organization dedicated to advocating for international justice for the Tamil genocide, preserving and archiving Tamil history, and advancing the right to self-determination of Eelam Tamils.

On this day, the Tamil Eelam National Flag is ceremonially hoisted, and a series of events and workshops are held to honor the resistance against genocide, while fostering dialogue on Tamil history, culture, and identity.

These activities aim to raise awareness, celebrate the significance of Flag Day, and foster a sense of shared understanding and solidarity among Eelam Tamils, Brampton residents, and the broader community.

**THEREFORE:** I, Mayor Patrick Brown, on behalf of Brampton City Council, do hereby proclaim November 21, 2025, as "Tamil Eelam National Flag Day" in the City of Brampton.

Mayor Patrick Brown, City of Brampton



# உலகின் சிறந்த நகரங்களில் இடம்பிடித்தது பெங்களூர்

## கனடா நிறுவன ஆய்வில் தகவல்

கனடாவை சேர்ந்த ரெசோனன்ஸ் கன்சல்டன்சி என்ற சர்வதேச ஆய்வு நிறுவனம் ஆண்டுதோறும் உலகின் பல்வேறு நகரங்களை ஆய்வு செய்து தலைசிறந்த நகரங்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டு உலகம் முழுவதும் 270 நகரங்களில் ரெசோனன்ஸ் ஆய்வு செய்தது. அப்போது நகரங்களின் கல்வி கட்டமைப்பு, கலாச்சாரம், சுகாதார கட்டமைப்பு, போக்குவரத்து, இரவு வாழ்க்கை, பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

இதன் அடிப்படையில் உலகின் தலைச் சிறந்த 100 நகரங்களின் பட்டியலை ரெசோனன்ஸ் கன்சல்டன்சி அண்மையில் வெளியிட்டது. இந்த பட்டியலில் இங்கிலாந்து தலைநகர் லண்டன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் 2 ஆவது இடத்தையும், பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் 3 ஆவது இடத்தையும் பிடித்தன.

இந்த பட்டியலில் இந்தியாவின் கர்நாடக மாநில தலைநகர் பெங்களூர் 29 ஆவது இடத்தைப் பிடித்தது. மகாராஷ்டிர தலைநகர் மும்பை 40 ஆவது இடத்தையும், இந்திய தலைநகர் டில்லி 54 ஆவது இடத்தையும் பிடித்தன. தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத் 82 ஆவது இடத்தைப் பெற்றது. வேறு எந்த இந்திய நகரங்களும் பட்டியலில் இடம்பெறவில்லை.





## உணவுப்பழக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன் காலாவதி திகதி பார்த்து உணவுப்பொருள்களை வாங்கிய பல நாட்டு மக்கள், இப்போது, எந்த உணவு விலை குறைவு என்று பார்த்து வாங்கத் துவங்கிவிட்டனர் என செய்திகள் வெளியாகிவருகின்றன.

இந்நிலையில், விலைவாசி உயர்வு காரணமாக, கனேடியர்கள் தங்கள் உணவுப்பழக்கத்தையே மாற்றிவிட்டனர் என சமீபத்திய ஆய்வொன்று தெரிவிக்கிறது.

Dalhousie பல்கலையும், Caddle என்னும் ஒன்லைன் தரவுத் தளமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வொன்றைத் தொடர்ந்து இந்த தகவல் வெளியாகியுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் ஐந்தில் நான்கு பேர், இப்போது தங்களுக்கு அதிக பாரமாக உள்ள செலவு உணவுப்பொருள்கள் வாங்குவதுதான் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பாதிபேர், விலைவாசி உயர்வு காரணமாக, தள்ளுபடி விலையில் பொருள்கள் வாங்குவது, கூப்பன்கள் பயன்படுத்துவது அல்லது ஒன்லைனில் குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கும் இடங்களில் பொருள்கள் வாங்குவது என தாங்கள் உணவுப்பொருள்கள் வாங்கும் விதமே மாறிவிட்டதாகத் தெரிவித்துள்ளார்கள்.

செலவுகளைக் குறைப்பதற்காக, மக்கள் வெளியே சாப்பிடச் செல்வது குறைந்துள்ளதாகவும், பெரும்பாலும் வீடுகளில் சமைத்து உண்ணுவதாகவும், brand பார்த்து எந்த பொருள் விலை குறைவாக உள்ளது என்பதைக் கவனித்து வாங்குவது, ஐஸ்கிரீம் போன்ற விடயங்களையும், மாமிசம், பழங்கள் போன்ற உணவுப்பொருள்களை குறைவாக வாங்குகின்றனர் என ஆய்வை மேற்கொண்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.



# ஐரோப்பிய விண்வெளி அமைப்பில் பெரும் முதலீடு செய்துள்ள கனடா

கனேடிய அரசு ஐரோப்பிய விண்வெளி அமைப்பில் (ESA) தனது பங்குகளை பெரிதும் உயர்த்தியுள்ளது.

528.5 மில்லியன் கனேடிய டொலர் (சுமார் 326.3 மில்லியன் யூரோ) கூடுதல் முதலீடு செய்வதாக கனடிய விண்வெளி நிறுவனம் (CSA) அறிவித்துள்ளது. இது, முந்தைய பங்களிப்புகளை விட பத்து மடங்கு அதிகம்.

இந்த முதலீடு, கனடாவின் வணிக, பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், உள்நாட்டு விண்வெளி தொழில்நுட்பங்களை மேம்படுத்த உதவும்.

“இன்றைய உலகம் மிகவும் சிக்கலானதும் ஆபத்தானதும் ஆகிறது. அதனால், நம்பகமான கூட்டாளிகளுடன் புதிய அணுகுமுறைகளை உருவாக்க வேண்டும்” என கனேடிய விண்வெளி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய விண்வெளி அமைப்புடன் நீண்டகால ஒத்துழைப்பின் மூலம், கனடிய நிறுவனங்களுக்கு ஐரோப்பிய விண்வெளி சந்தையில் சிறப்பு அணுகல் கிடைக்கிறது.

ESA ஒப்பந்தங்கள் மூலம் கிடைக்கும் ஒவ்வொரு டொலரும், 3 மடங்கு கூடுதல் விற்பனையை உருவாக்குகிறது. இதனால், கனடாவின் பொருளாதாரத்திற்கு பெரும் மதிப்பு சேர்க்கப்படுகிறது.

இது கனடாவின் விண்வெளித் துறையை உலகளவில் முன்னேற்றும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும், தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் வரலாற்றுச் முதலீடு என கனேடிய தொழில்துறை அமைச்சர் Melanie Joly தெரிவித்துள்ளார்.

ESA-வின் geographical distribution principle அடிப்படையில், முதலீட்டின் அளவுக்கேற்ப கனடிய நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்படும். இதனால், புதுமை, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி ஆகியவை அதிகரிக்கும்.

2023-ஆம் ஆண்டில், கனடாவின் விண்வெளி துறை 5.1 பில்லியன் டொலர் வருவாய், 3.4 பில்லியன் டொலர் GDP பங்களிப்பு மற்றும் 14,000 உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

இந்த புதிய முதலீடு, கனடாவை உலக விண்வெளி மேடையில் நம்பகமான மற்றும் முன்னோடியான கூட்டாளியாக நிலைநிறுத்துகிறது.

